# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண்: 175/2018/பே**

**ஆணை நாள். 09–11–2018**

**திரு. M. ஆறுமுக நயினார்,**
**உரிமையாளர்,**
**கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,**
**2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,**
**மைலாப்பூர்,**
**சென்னை – 600 004.**

-- முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**திருக்கோவிலூர் பேரூராட்சி,**
**விழுப்புரம் மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

திரு. M. ஆறுமுக நயினார், எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை, மைலாப்பூர், சென்னை–4, என்பவரின் 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 175/2018 என எண்ணிடப்பட்டு, மேற்படி முறையீட்டு மனு மீதான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. M. ஆறுமுக நயினார், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.அ1/102/2013/நாள்.29.05.2014ன்படி மேற்படி பேரூராட்சியில் புராதான நகரங்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்த அறிவிப்பு தனது கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி என்ற நிறுவனம் மூலம் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரத் தொகையாக ரூ.33,208/– பட்டியல் எண். 036/2014–15 நாள் 04.06.2014 மூலம் திருக்கோவிலூர் பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டும், மேற்படி தொகை கடந்த நான்கு ஆண்டு காலமாக தனக்கு கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

09.08.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

17.09.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யும் பொருட்டு

08.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து, முறையீட்டு மனுதாரர் மற்றும் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 08.11.2018ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு.சிவராஜன் என்பவர், தனது வாக்குமூலத்தில் மேற்படி முறையீட்டு மனுக்கள் தங்கள் நிறுவனத்தால் அனுப்பப்பட்டதாகவும், அதில் கூறியுள்ளவாறு திருக்கோவிலூர் பேரூராட்சியில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பேரூராட்சி மூலம் அளிக்கப்பட்ட விளம்பரத்தினை பிரசுரம் செய்த வகையில் ரூ.33,208/– மற்றும் ரூ.35,048/– ஆகிய இரண்டு தொகைகளும் இன்னமும் கொடுக்கப்படாமல் உள்ளதாகவும் இதனை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொணடுள்ளார். டெண்டர் அறிவிப்பு, செய்தி பிரசுரம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை கடிதம் ஆகியவற்றின் நகல்களை ஏற்கனவே மனுவுடன் சமர்ப்பித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவத்தில் 08.11.2018 அன்று ஆஜரான திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மேற்படி Greenways Publicity நிறுவனக் கடிதத்தில் 2014ம் ஆண்டு செய்யப்பட்ட பணிகள் ஒப்பந்தம் குறித்தான விளம்பரத் தொகைக்கான பட்டியல் தொகை ரூ 33,208/– காசோலை வழங்க தயாராக உள்ளதாகவும், பிறிதொரு இனத்தில் ரூ.36,408/–க்கான கேட்பு பட்டியல் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லாததால் தற்போது சம்பந்தப்பட்டவரிடம் பட்டியல் கேட்டுப் பெறப்பட்டதாகவும் தொகை வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் பட்டுவாடா செய்யப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்டவாறான செயல அலுவலரது வாக்குமூலத்தினை ஏற்று இம்முறைமன்ற நடுவ தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 09 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்,
திரு. ஆ. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் ு பப்ளிசிட்டி,
எண். 2. வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

2.செயல் அலுவலர்,
திருக்கோவிலூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்–607001.